## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண். 35/2022

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி சி. நிர்மலா, உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு ஜனவரி மாதம் 19 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கோவிந்தன் | மதம் | : |
| த/பெ | : வீரராகவலு | ஜாதி | : |
| வயது | : 65 | கிராமம் | : வெங்கடாபுரம் |
| தொழில் : | | வட்டம் | : |

**19.01.2024**
**வா.சா. 1 ன் முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து **என்னுடையதுதான்**. எனது பிரமாண வாக்குமூலத்தை நான் தமிழில் தாக்கல் செய்கிறேன். நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்குத் தெரியும். அ.வ.எண். 69/2012 ல் வழக்கறிஞர் ஆணையர் நியமணம் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள அறிக்கை **வா.சா. ஆ. 2 ஆகும்.** தாவாவில் கோரியுள்ளபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.